# 24. காரைக்காலம்மையார்

வணிகர் - சோழநாடு - காரைக்கால் - பங்குனி - சுவாதி

இவருக்கு பெற்றோரிட்ட பெயர் புனிதவதியாகும். வைத்திருந்த மாம்பழம் இரண்டில் ஒன்றைச் சாப்பிட்டதும், மற்றொன்றையும் கேட்டான் புனிதவதியின் கணவன். அதனைச் சற்றுமுன் வந்த சிவனடியாருக்குத் தந்து, உபசரித்திருந்த படியால் சொல்வதற்குப் பயந்து, செய்வதறியாமல் திகைத்து ஈசனை எண்ண, அவள் கையில் ஓர் மாம்பழம் வந்தது. அதனைத் தன் கணவனிடம் கொடுத்தாள் புனிதவதி. ருசி வேறாக உள்ளதாகக் கணவன் கூற புனிதவதி நடந்ததைக் கூறினாள். அதை நம்பாத கணவன், இன்னுமொறு மாம்பழம் தனை தருவிக்கச் சொல்ல, அவளும் ஈசனருளால் தருவித்து அவனிடம் தந்தபின் அது மறைந்தது.

இதனைக் கண்டதும், பரதத்தனுக்கு புனிதவதியார் மீது பயமும் பக்தியுமுண்டாயிற்று. அவளுடன் கணவனாய் வாழ்க்கை நடத்த அவன் மனம் ஒப்பவில்லை. வேற்றூரில் வணிகம் செய்து வேறொரு பெண்ணை மணந்து குடும்பம் நடத்திவந்தான்.

இதையறிந்த புனிதவதியாரின் உறவினர், புனிதவதியை அவனிடம் அழைத்துச் சென்றனர். பரதத்தன் புதுமனைவியுடன் புனிதவதியை வணங்கி தன் மனதிள்ளதைக் கூறினான். பின்னர் புனிதவதியார் ஐயனை நோக்கி, தன் கணவனுக்காகவே போற்றிவந்த இவ்வுடலை நீக்கி, பேயுறு அளிக்குமாறு வேண்டிப் பெற்றாள். பின் அற்புதத்திருவந்தாதியும், இரட்டை மணிமாலையும் பாடினான். பேயுருவோடு தலைகீழாய் நடந்து, ஐயனை அடைந்து, பிறவாவரம் கேட்டுபின் ஐயன் ஆட்டத்திற்குதான் பாடும்படி அருளுமாறு வேண்டினாள், அவ்வாறே ஆலங்காட்டிற்குச் சென்று (தலைகீழாக) பதிகங்கள் பாட அய்யன் ஆடினார். ‘‘அய்யனால் அம்மையே’’ என அழைக்கப் பெற்றார். என்றும் சிவனடியிலேயே தங்கி பாடிக் கொண்டிருந்தார்.

ராகம் : ஹம்ஸானந்தி (43) ஆ : ஸரிகமதநிஸ்
தாளம் : ஆதி (திச்ர நடை) அவ : ஸ்நிதமகரிஸ

**பல்லவி**

சிவபக்தை புனிதவதியைப் பரதத்தனுக்கு மணம்
முடித்தார் தந்தை தனதத்தனார்

**அனுபல்லவி**

சிவனடிக்கு தந்த கனி திரும்ப கிடைக்கச் செய்து
கணவனும் அவரை அறிந்திடச் செய்தீர்

**சரணம்**

பயந்த கணவன் மாற்று மனைவியுடன் வாழக்
கண்ட புனிதவதி உனை வேண்டிப் பேயாகி
அயராமல் தலை கீழாய் கயிலைக்கு வந்தவரை
ஆலங்காட்டு நடத்திற்குப் பாடப் பணித்திட்டாய் ஐயா

**பல்லவி**

| | | |
|---|---|---|
| ஸ்நித நிதம ககக ககக | க நிதம கம | கஸ ஸஸ ஸா |
| சிவ பக் தை புனித வ தியைப் | ப ர த த் த | னுக்கு, மணம் |
| நிநிஸகா; ; காக | க ம த நி நிரி. | ஸா; ; |
| முடித் தார் தந்தை | தன த த் த . | னார் |

**அனுபல்லவி**

| | | |
|---|---|---|
| க ம த நிநி தஸ்ாநி ரி.ஸ்ா | நி ஸ் ஸ் ஸ்ஸ் ஸ் | த நிஸ் நித |
| சிவன டிக்கு. த ந்த கனி | திரும்ப கிடைக்கச் | செய்து . . |
| ஸ் க்ரி ஸ்ா நி த மத நீ. | ஸ் நிநி த த ம | கமகா ; |
| கண வ னும் அவரை. | அ றிந் தி ட | ச் செய் தீர் |

**சரணம்**

| | | |
|---|---|---|
| ஸரிக ககக கமம கா, | ஸ் நித மகா | கம கா; |
| பயந்த கணவன் மா . ற்று | ம னைவி யு | டன் வா. ழக் |
| க மத மமக கரிஸா; | ஸாரி காக | ஸ்நிதாமா |
| க ண்ட புனித வதி | உனை வேண்டி | பே. யா கி |
| ஸ்நிதமதா ஸ் ஸ் நி ரிஸா | ஸ்நிஸ் ரி. க்ா | ரி.க்ரி.ஸ்ஸா |
| அய ரா.மல் தலைகீ. ழாய் | கயி லைக் கு | வந் த வ ரை |
| ஸ்ாரி. ஸ்ாஸ் த நிதம தா | மதநீதா தமம | மாக ம த நி |
| ஆலங் காட்டு நடத்தி ற்குப் | பா.டப் பணித் | திட்டாய் ஐ . யா |